بسم الله الرحمن الرحيم

# *Friday Sermon* 17/07/2015

**(30 RAMADHAN 1436 HIJRI)**

## முஸ்லிம்களின் இரண்டு பண்டிகைகள்

## THE TWO FESTIVALS OF THE MUSLIMS

### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

எல்லா மக்களுக்கு சலாம் கூறிய பின் தஷஹ்ஹுதும் தஅவுசும் அல்பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அ) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

ஹஸ்ரத் முஹமது (ஸல்) வின் ஆன்மீக குடும்பத்தை சார்ந்த நமக்கு இரண்டு பண்டிகைகள் அனுமதிக்கப்படுகின்றது. அந்த இரண்டு பண்டிகைகளும் அல்லாஹ்வின் கட்டளைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றிக் கொண்டதன் பலனாக, இறைவனின் அன்பும் திருப்தியும் என்ற நிலையில் தந்தருளப்பட்டிருப்பதேயாகும். இந்த இரண்டு சந்தோஷமான நிமிடங்களாகும் உண்மையில் **''ஈதுல்பித் தரும்'' ''ஈதுல் அத்ஹாவும்''**!

அருள் நிறைந்த ரமலான் மாதத்தின் பின்னரே ஈதுல் பித்தர் பண்டிகை. அல்லாஹ்விலிருந்துள்ள பிரதி பலன் பெற்றுக் கொள்வதற்கான விருப்பத்துடனும், அல்லாஹ்வை தங்களின் இதயத்திலும் ஆன்மாவிலும் ஈர்த்துக் கொள்வதற்கான நோக்கத்துடனும் அவனுக்காகவே நோம்பு நோற்று அவன் முன் சமர்பித்த பிரார்த்தனைகளுடையவும் நற்செயல்களுடையவும் முடிவில் நாம் அனுபவித்துக் கொள்ளும் மகிழ்ச்சி வாய்ந்த தினமாகும் அது. ஈதுல் அத்ஹா அதாவது பக்ரீத் என்ற பெயரில் கூறப்படும் பண்டிகை என்பது ஹஜ்ஜ்கர்மங்களின் முடிவில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அ) முடையவும் ஹஸ்ரத் இஸ்மாயில் (அ) முடையவும் தியாகம் வாய்ந்த வாழ்க்கையினை நினைவுட்டும் புண்ணிய தினமாகும்.

அல்லாஹ்வின் அருளால் ஒரு மாத நோன்பு நோற்றபின் இறுதியில் நாம் நாளையைத் தினம் ஈதுல் பித்தர் கொண்டாடுகின்றோம். இன்ஷா அல்லாஹ்! இந்த மகிழ்ச்சி, நோன்பு நோற்பவனின் பக்தியிலிருந்து உருவாகின்றதும் அல்லாஹ்வின் சன்னிதியிலிருந்து ஒழுகி வருவதும் ஆகும். ஒரு சந்திர மாதம் முழுவதும் அல்லாஹ்வின் திருப்திக்காக ஒருவன் தியாகம் செய்கின்றான். அத்தியாகத்தின் பிரதிபலன் எல்லா வல்ல அல்லாஹ்வே ஆவான் என்ற வாக்குறுதி உண்மையில் முழுமைப் பெற்று விடுகின்ற நாள் அதுவேயாகும் ரமலான் பண்டிகை அதாவது ஈதுல் பித்தர் பண்டிகை.

அல்லாஹ்வின் அருளால் முஸ்லீம்களான நாம் அஹமதி முஸ்லீம்கள் ஆகி விட்டோம். இருளிலிருந்து ஒளியின் பால் மக்களை வழி நடத்திட நூறு வருடங்களுக்கு முன் தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) மின் ஆன்மீக குடும்பத்தை சார்ந்தவர்களே நாம்.

இறை போதனைகளுக்கு பதிலாக சுய விருப்பங்களை பின்பற்றிக் கொள்ளும் பொழுது இறை பாடங்களின் உண்மையான கருத்தை நிலை நாட்டிக் கொள்ள அல்லாஹ் தன் நடை முறைக்கு ஏற்றவார் தூய வெளிப்பாடுகளுடன் அவனது பிரதிநிதிகளை தோற்று விக்கின்றான்.

கருணாநிதியான இறைவன் அவர்களை தண்டனைக்கு ஆளாக்குவதற்கு முன் இறை தூதரை தோற்றுவித்து, உண்மையான போதனைகளை வழங்கிக் கொள்வது அவனது நடைமுறையாகும். அது வழியாக இறை செய்தியினை நம்பிக்கையாளர்களுக்கு அவன் எட்ட வைக்கின்றான். உண்மையின் பாதையில் அவர்களை வழிநடக்கச் செய்கின்றான்.

இது ஆரம்ப காலம் முதல் தொடர்ந்து வருகின்ற ஒரு நடை முறையாகும். அதிகாரத்திலும் பதவியிலும் இருப்போர்கள், பொது மக்களை ஏமாற்றிக் கொள்வதும் சூரையாடிக் கொள்வதும் தவறான வழிகளில் தூண்டிக் கொள்வதும் செய்வதால் இந்த நடைமுறையினை அவன் அமல்படுத்திவருகின்றான். அதற்காகவே றூஹில் குத்சுமாக இறைவன் தனது ஆள்களை நியமித்துக் கொண்டிருப்பது. இறைச் செய்தியுமாக அவன் தனது ஆள்களை தோற்றுவிப்பதன் காரணமாக இறைவனிடமிருந்துள்ள தூய ஒளியினை பெற்றுக் கொள்வதற்கும் இறை திருப்தியினை அடைந்துக் கொள்வதற்கும் மக்களுக்கு வழி திறக்கின்றது.

முற்றிலும் கெட்டவர்களாக மாறிய பண்டிதவர்கங்கள் இஸ்லாமிக போதனைகளையாவும் களங்கப்படுத்திக் கொண்ட வேளையில் அல்லாஹ் தனது மஸீஹான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) மை நியோகித்து கொண்டான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாழ்ந்திருந்த காலயளவில் அன்னார் றூஹில் குத்சினைப் பெற்றுக் கொண்டிருந்தார். அதனால் அன்னாரின் ஜமா அத்து மிகத் தூய்மையாக நிலை கொண்டது. அதைப் போன்று என்றென்றும் அது மிகத் தூய்மையாக நிலை கொள்ளும் என நீங்கள் எண்ணுகின்றீர்களா?

ஒரு ஜமாஅத்தை மக்கள் உருவாக்குகின்றார்கள். அம்மக்களும் குறிப்பாக, ஆன்மீக தலைவர்களும் அவர்களை பின்பற்றுகின்றோர்களும் ஊழல்களில் முழுகியிருக்கின்றனர். இந்த நிலையில் அல்லாஹ் மௌனமாகயிருந்து விடுவான் என்றும் மிக நம்பிக்கை வாய்ந்த அவனது தூதர்கள் மூலமாக அமைத்துக் கொண்ட உண்மையான தீனுல் இஸ்லாமைப் பாது காத்துக் கொள்ள அவனது பிரதிநிதியை நியமிக்க மாட்டான் என்றும் நீங்கள் நினைக்கின்றீர்களா? அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவும் அனைத்தும் அவன் வழியில் அர்பித்துக் கொள்ளவும் செய்த நம்பிக்கையாளர்களுக்கு **''ஈதாக''** அவன் அவனது பிரதிநிதியை நியோகித்துக் கொள்ள மாட்டான் என நீங்கள் எண்ணுகின்றீர்களா? இறைவன் நியமித்துக் கொள்கின்றவர்களை ஏற்றுக் கொள்ளுவதற்கும் ஓத்துக் கொள்வதற்கும் இறையடையாளங்களை தரிசித்து மகிழ்ச்சியடைவதற்குமாக காத்திருக்கின்றோர்கள் உண்டு என நீங்கள் எண்ண வில்லையா? அவ்வகையான இறைத் தூதர்கள் தங்களின் முன் பிரதி நிதிகளின் அந்தஸ்தையும் பாடங்களையும் பாது காத்துக் கொள்கின்றோர்களாகயிருப்பார்கள்

என நீங்கள் புரிந்துக் கொள்ள வில்லையா? அவ்வகையாளர்களான இறைத் தூதர்கள், இறை வேண்டுகோள்களை ஏற்றுக் கொள்வதும் ஒத்துக் கொள்வதும் இறை வெளிப்பாடுகளுடையவும் உண்மையான கனவுகளுடையவும் அடிப்படையிலாகும் என நீங்கள் உணரவில்லையா?

எனது அன்புக் குரியவர்களே உங்களின் ஆன்மீகத்தை உயர்த்திக் கொள்ளவும் அல்லாஹ்வின் மீதான உங்களின் பந்தத்தை ஊட்டி உறப்பித்துக் கொள்ளவுமாக ஒரு தூதர் உங்களுக்காக தோன்றியிருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்துக் கொள்ள வில்லையா? அவ்வகையான ஒரு தூதரை அல்லாஹ் தேர்ந்தெடுத்திருகின்றான். மக்கள் வாக்களித்தல்ல அவரை தேர்வு செய்திருப்பது அவர்களின் தலைவராகயிருக்க! மக்கள் தேர்ந்தெடுக்கின்ற ஒரு தற்காலிகமான ஆன்மீக தலைவருக்கும் அதைப் போன்றே றூஹில்குத்சுமாக அல்லாஹ் நியமிக்கின்ற அவனது தூதருக்கும் ஒன்றுக் கொன்று மிக பெரிதான வேற்றுமையுண்டு என்பதை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அ) மின் நம்பிக்கையின் படி அன்னார் மட்டுமல்ல வாக்களிக்கப்பட்ட மஸீஹ். தனக்கு பிறகும் வேறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்மார்கள் வருகை தருவார்கள். அவர்கள் அனைவர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மையினை நிலை நாட்டிக் கொள்போர்களும் மக்களை இருளிலிருந்து பிரகாஷத்தின் பால் வழி நடத்திக் கொள்போர்களும் ஆவார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை விளக்கிக் கொள்வதற்காகவே இந்த இறை மனிதர்களை தோற்றுவிப்பது. மக்களின் விருப்பத்திற்கு எற்றவார் கூறிக் கொள்வதற்கல்ல. அவ்வகையாளர்களை மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அல்லாஹ்வும் அறிவாளிகளும் அவ்வகை தூதர்களை மறுத்துக் கொள்வதுமில்லை.

கடந்த வெள்ளிக் கிழமை குத்துபாக்களில் நான் விளக்கிக் கொண்டது போன்றே இறை தூதரின் காலகட்டம் என்பது இருளின் கால கட்டமேயாகும். **இந்த இருளின் கால கட்டத்தில் இறை ஒளி, உண்மையின் பிரகாஷம் சொர்க்கத்திலிருந்து தோன்றி, இருளிலிருந்து மக்களை ஒளியின் பால் எட்ட வைத்திடவும் செய்யும். பொய்மை எனும் கோபுரம் இடிந்து வீழ்ந்து விடவும் மெய்மை எனும் ஒளி ஆகாயத்திலும் பூமியிலும் பரவி விடவும் ஒரு பிரத்தேகமான பிரகாஷத்தால் விண்ணும் மண்ணும் நிறைந்து விடவும் செய்யும். அந்த பிரகாஷத்தின் வருகையை, அந்த இறை தூதரின் தோற்றத்தை வரவேற்றுக் கொள்வோர்களுக்கு அது ஒரு பண்டிகை ஆகும். இதோ நான் இங்கு அல்லாஹ்வின் பால் அழைக்கின்றேன். உங்களின் அனைத்தும் அல்லாஹ்விடத்தில் சமர்பித்துக் கொள்ள கேட்டுக் கொள்கின்றேன். பூமியில் அல்லாஹ்வின் தூதர் வாழ்ந்திருக்கும் காலம் வரையில், அன்னாரின் தலைமையில் அல்லாஹ்வின் செய்திகள் பரவி கொண்டிருக்கும் நேரம் வரையிலும் அந்த மகிழ்ச்சி நிலை நிற்பதேயாகும். இந்த இறை செய்தியினை பரவ செய்வதற்காக அன்னார் பல்வேறு வகையும், பல்வேறு வழியும் பயன்படுத்திக் கொள்வார். அந்நிலையில் மக்கள் வெறுப்பும் அறப்பும் காட்டிக் கொள்ளாமல் தாழ்மையுடனும் மகிழ்ச்சியுடனும் அதை ஏற்றுக் கொள்ளட்டும்.**

தன் அடியார்களில் எவருக்காவது ஒருவருக்கு உண்மையை பிரகடனப்படுத்திடவும் அந்நபரின் மீது அருள் கொடைகள் பொழிந்திடவும் தான் தேர்ந்தெடுத்த தூதரில் மக்கள் நம்பிக்கை கொண்டிடவும் செய்கின்ற வேளையில் உலகம் இதோ பைத்தியமாக பரிணமிக்கினறது. ஆனால் தூதரும் அவரது தோழர்களும் இதைப் போன்றல்ல! இந்த

உண்மையைப் பற்றி சற்று சிந்தியுங்கள். அதற்குப் பின் பிரார்த்தனைச் செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ்! மக்கள் தேர்ந்தெடுத்த ஒரு கலீ∴பா இருக்கும் பொழுது, அல்லாஹ் அவனது திட்டங்களை அமல்ப்படுத்திக் கொள்ள அவனது தூதரை நியமிக்கின்ற வேளையில் அதை பகுத்தறிவதற்கான ஆற்றல் வழங்கி உங்களுக்கு அவன் அருள் புரிவானாக! துரதிர்ஷ்டத்தால் மக்கள் தேர்வு செய்த கலீ∴பாவின் பின்னால் பெரும்பான்மை மக்களும் செல்கின்றனர். ஒரு இறை தூதரின் பதவிக்கு எற்றவார் அவர்கள் அன்னாரை உயர்த்திக் கொள்கின்றார்கள். அது அவர்களின் தவறான விளக்கமேயாகும். அவர்கள் திரு குர் ஆன் வசனங்களை வளைத் தொடிக்கின்றார்கள். மக்கள் தேர்வு செய்து நியமித்த ஒரு தலைவருக்கும், அல்லாஹ் தேர்வு செய்து நியோகித்த ஒரு கலீ∴பாவுக்கும் ஒன்றுக் கொன்று மிக பெரிய வேற்றுமை உள்ளது. இரண்டு பேர்களையும் தேர்ந் தெடுக்கப்பட்டதாகும். ஆனால் அதில் ஒருவருக்கும் மட்டுமே இறை பிரகாஷத்தினுடையவும் றூஹில் குத்சினுடையவும் துணையிருப்பது. ஆனால் மிகக் குறைவான நபர்கள் மட்டும் அன்னாரில் நம்பிக்கை கொள்ளவும் பெரும்பான்மை மக்களும் அன்னாரை நிராகரித்துக் கொள்ளவும் செய்கின்றனர். இப்பூவிலகில் அன்னாரின் கடமை நிறைவுப் பெறும் வரையில் அதாவது அன்னாரின் வபாத்திற்கு பிறகு மக்களின் கண்களிலிருந்து திரை விலகிக் கொள்ளவும் அல்லாஹ்அவனது தூதருக்கு வழங்கியிருந்த இறையத்தாட்சிகளையும் அடையாளங்களையும் மிக நன்கு அவர்கள் கண்டு கொள்ளவும் செய்வார்கள்.

உங்களின் சந்தேகங்களுடையவும் தோன்றல்களுடையவும் திரையினை அல்லாஹ் நீக்கச் செய்வானாக! அதைப் போன்றே உங்களின் இதயகளுக்குள் நுழைந்திருக்கும் அய்யவும் அவன் நீக்குவனாக! பயம் வாய்ந்த மனிதன் உங்களை பைத்தியக்காரன் என்றும் சிந்திக்காதவன் என்றும் கூறலாம். ஆனால் ஒரு வேளை உண்மை, தோன்றல்கள் எனும் திரையினால் மறைந்து கிடந்து விடலாம். நீங்கள் ஒரு மன நோயாளியாகயிருந்தீர்கள்என்றும் தற்பொழுது நலம் பெற்று விட்டீர்கள் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் எல்லா விஷயங்களிலும் பைத்தியமோ தோன்றலோ ஆகி விடலாம் என இல்லை. அல்லாஹ் தேர்ந்தெடுக்கின்ற தூதரின் விஷயத்தில் உலகனைத்தும் எதிர்த்தாலும் மறுத்தாலும் சரி அவர் பைத்தியக்காரன் ஆவதில்லை. நேரம் எட்டும் பொழுது பைத்தியக்காரனாகிய தூதரின் உண்மை வெளிவரவும் செய்யும். அந்நேரம் தோன்றல்கள் முழுவதும் மாய்ந்து மறைந்துப் போய் விடவும், மக்கள் விருப்பத்திற்கு மேலாக அல்லாஹ்வின் விருப்பம் வெற்றிப் பெற்று விடவும் செய்வதை பார்க்கலாம். இன்ஷா அல்லாஹ். உண்மை வெளிப்பட்டுக் கொள்ளும் நேரம் மிக அருகாய்மையில் அல்லாஹ் ஆக்குவானாக! அவ்வாறேயானால் அல்லாஹ்வின் உண்மைகளையும் அருள்களையும் ஐய்யமில்லாத நிலையில் தரிசித்து உலகிற்கு மகிழ்ச்சியடையலாம். இன்ஷா அல்லாஹ்!

நேற்றயை நாள் பஜ்ஜர் வேளையில் அதாவது 2015 ஜீலை 16 வியாழக் கிழமை (29 ரமலான் 1436) நமது ஜமாஅத்தில் புதிதாக இணைந்த ஒரு சகோதரி திகரில் (இறை நினைவில்) இருந்த வேளையில் அவருக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது. இந்த இறை செய்தி சதர்சாஹிபாவுக்கும் குடும்பத்திற்கும் என அதாவது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்காக என அல்லாஹ் அவரைப் புரியவைத்தான். அந்த பெண்மணி அல்லாஹ்விடத்தில் தூவா செய்துக் கொண்டிருந்த வேளையில் திடிரென அவரின் கண்போளைகளின் இடை அதிகரிப்பதாகவும் அதன் காரணம் கண்கள் அடைந்து விடுவதாகவும் தென்பட்டது. பின்னர் ஒரு இறை சத்தம் ஆங்கிலத்தில் கேட்டது. (தூது செய்தியை எங்களுக்கு வழங்கி கொள்ள)

**‘‘கண்ணிய மிக்கதும் நினைவூட்டுகின்றதுமான ஈது நாளில் தாங்களும் தாங்களின் குடும்பத்தினரும் அருளுக்கு மேல் அருள் கொடைகளால் போர்த்தப்படுவீர்கள். தங்களுக்கு எந்த விஷயத்திலும் எவ்விதமான குறைவும் வருவதில்லை. எல்லா விஷயங்களிலும் நீங்கள் முழுமைப் பெற்று விடுவீர்கள். பரிபூரணமான சந்திரனைப் போன்று. இரட்சகனான அல்லாஹ் உண்மையாகவும்’’**

ரமலான் முடிவுப் பெற்றுக் கொள்ள சில மணி நேரம் மட்டுமே எஞ்சுகின்றது. எல்லா முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கும் குழந்தைகளுக்கும் அஹ்மதியா முஸ்லீம்களுக்கும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த எனது தோழர்களுக்கும் நான் ஈது நல்வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றேன். வருகின்ற நாள்கள் அனைத்தும் உங்களுக்கு ஆன்மீக மகிழ்ச்சி பெற்றுக் கொள்ளவதற்கான ஈதாகயிருக்கட்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் அர்ப்பணம் செய்து கொண்டதன் மூலமாக கிடைத்த பயிற்சிகளையாவும், இறையடையாளங்களை பரவ செய்வதற்கான ஆயுதமாக மாறட்டும். **எங்கு சமர்பணம் இருக்கின்றதோ அங்கு உட்கொள்தல் சக்தி அதிகரிக்கின்றது. அல்லாஹ்வின் வழியில் உட்கொள்தல் சக்தி எங்கு உள்ளதோ அங்கு அவனுக்கு உண்மையும் பொய்மையும் பகுத்தறிய முடிகின்றது. அதாவது அல்லாஹ்வின் ஒளியையும் அதைப் போலவே உண்மையினைத் தேடுபோர்களையும் பொது மக்களையும் அபாயப்படுத்திடும் சாத்தானின் இருளையும் பிரித்தறிந்திட இயலுகின்றது. என்ன நிகழ்ந்தாலும் சரி, அல்லாஹ்விலிருந்துள்ள உண்மையான அன்பினை இறுகப்படித்திடவும் சாத்தானின் வழியினை தூக்கி வீசிடவும் செய்போர்கள் பாக்கிய சாலிகளே ஆவார்கள்.**


**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650

9789180817